**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3431/ஆ5/2023, நாள்.27.09.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டுஅரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு கட்டுரை போட்டிகள் நடத்துதல் – தொடர்பாக

பார்வை ஆற்காடு, ஆற்காடுசார் தொல்லியல் அலுவலர் கடித நாள். 12.08.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தின்படி தொல்லியல் துறை சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காட்பாடி, கே.வி.குப்பம் மற்றும் கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு கீழ்காணும் அட்டவணைப் படி கட்டுரை போட்டி நடைபெற உள்ளது.

**போட்டி நடைபெறும் இடம் – அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி**

**நாள் – 06.10.2023 (வெள்ளிக்கிழமை) நேரம் – காலை 9.00 மணி**

**கட்டுரை போட்டியின் தலைப்பு – "பண்டைத் தமிழ்ச் சமூகம்"**

மேற்காணும் போட்டிக்கு காட்பாடி, கே.வி.குப்பம் மற்றும் கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் பள்ளிக்கு ஒருவர் வீதம் என தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்கும் மாணவ / மாணவிகளை பாதுகாப்பாக பொறுப்பாசிரியருடன் அனுப்பி வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காட்பாடி, கே.வி.குப்பம் மற்றும் கணியம்பாடி ஒன்றியத்திற்குட்பட்ட அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது..

**குறிப்பு –**

1. கட்டுரை 8 பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். காலம் இரண்டு மணி நேரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. கட்டுரை போட்டியில் கலந்துக்கொள்ளும் மாணவர்களுக்கு கட்டுரை எழுதுவதற்கான தாள், பேனா மற்றும் பங்கேற்பாளர் சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
காட்பாடி, கே.வி.குப்பம் மற்றும் கணியம்பாடி ஒன்றியங்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. ஆற்காடு சார் தொல்லியல் அலுவலர், ஆற்காடு – 632 503.
2. தலைமையாசிரியர்,
   அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )